**Subscription**
Inland: Rs. 50/- per year.

FOR ADVERTISEMENTS
*Apply to*:
**The Manager,**
Morning Star', Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QJ/J/64/News/87*

Established: 1841: A Christian Weekly: Published Every Friday

Vol. 148 JAFFNA, FRIDAY, 22d & 29th APRIL 1988. No. 4 & 5

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**UNDELIVERED ISSU**

Please re address all undelivered issue of the **Morning Star**

**The Manag**
"Morning St
Vadduko<br>ddai.



## J. D. C. S. I.
## 41st Annual Meeting

The following were elected to various boards and committees for 1988.

Secretary J. D. C. S. I.: Rev. A. Jeyakumaran.

Pro-tem Secretary: Mr. G. Rajanayagrm.

Executive Committee: Rev. D. S. Thiyagarajah, Rev. D. R. Ampalavanar, Mr. A. Kadirgamar, Mr. J. M. Sabaratnam, Dr. S. Jebanesan, Mr. M. Thambithurai, Mr. C. Jeyaratnam.

Representatives N. C. C.: Rev. T. S. Premarajah, Rev. S. Jeyanesan, Mrs. H. N. Rajaratnam, Mr. M. Thmbithurai, Dr. S. Jebanesan.

C. M. C. Vellore: Mr. A. Kadirgamar, Dr. (Mrs) R. G. Selvadurai.

Jaffna College Board: Dr. (Mrs.) M. Arudchelvam, Mr. S. S. Selvadurai, Rt. Rev. Dr. S. Kulandran.

Institute of Technology and Agriculture: Mr. S. Ratnavel.

C. L. S. Colombo: Rev. T. S. Premarajah, Mr. G. Rajanayagam.

U. T. C. Bangalore: Bishop, Mr. A. Kadirgamar.

**Appointments**

*Treasurer J. D. C. S. I.*: Mr. Noel A. Vimalendran.

*Manager Uduvil Girls College*: Mr. S. S. Selvadurai.

*Director R. E. B.*: Mr. G. Rajanayagam.

*Manager Morning Star*: Mr. A. Rajasingham.

*English Editor*: Mr. C. E. Rajasingam.

*Associate English Editor*: Dr. S. Jebanesan.

*Tamil Editor*: Rev. D. R. Ampalavanar.

## Tamil Christian Worship at Perth — W. Australia

The first Anniversary Celebrations of the Tamil Christian Worship in Perth was held on 6-9-87 at the Osborne Park Uniting Church — where the monthly Tamil Service is held on the first Sunday of each month. Mr. Stanley Sinnadurai the chief organiser of the Tamil Service presided over the function. Rev. Des Fielding the Vicar of the Osborne Park Uniting Church was the chief guest and he preached the sermon. It was based on the protection and guidance provided by the Almighty to the Israelities when they were led out of captivity from Egypt.

Mr. N. S. RathinaSingham commenting on the period under review said that the number of families, attendance and preachers have either doubled or trebled and multiplication has been the Mathematics of their progress. He also based their hopes on learned Gamaliel's remarks "that which has a divine origin cannot disappear or be defeated"

(Acts V: 37-40).

The Service was followed by a tea party well attended by members and friends — a gathering of over 150.

Mr. Stanley and Mr. RathinaSingham are both Alumni of Jaffna College.

*An Appreciation*

## Mrs. Annie Ramabai Jeyanayagam

Manipay morns the demise of *Ramabai* as she endeared herself to one and all — the rich and the poor, the young and old and the Hindu and Christian. She fougnt the good fight, led an exemplary life and is now at rest with Jesus.

The elder daughter of the late Mr. and Mrs. Lewis Subramaniam who held a high ranking civilian post in India, she graduated there and joined the staff of Holy Family Convent Jaffna, her old School, as a Teacher. She taught for many years and won the liking and respect of the staff, the students and the parents.

Later she shifted to Manipay, her home town and taught at Memorial English School for many years till her retirement. She was an excellent teacher, had the interest of her students at heart and spared no pains to improve the lot of the weaker students. She was desciplinarian too. Her erudition, culture, winsome smile and chaste humour won the hearts of everybody. To the staff she was a happy associate and to the students she was a guiding light. She was a lover of peace and happiness. The moment she spotted any difference of opinion or ill will between the Principal and any member of the staff she would rush in to put things right. The students too — both boys and girls — sought her ready help eagerly to solve their own problems. She was a sort of a Mater familiar and was soon second in command. Here again she won the greateful hearts of the entire school — the staff, the students and the parents.

She was endowed with a particularly golden heart. During her retirement her life was marked by acts of love and charity. She could never bear the sight of any one suffering. She awaits a chance to help and derives immense pleasure from helping others. She put many a family on their feet and many a forlorn youth — boys and girls — back to life and sweet and peaceful living. Her charity knew no bounds. Caste or creed never interfered with her sense of giving. It was open to all. No wonder everybody honoured and revered her. She was a Christian par exeellence.

She was very much devoted to the Church and its activities. Although she was an Anglican, she kept faith with the Manipay Church in all its efforts. She would never miss a service or Christian function. She even organised a prayer group of ladies to visit the neighbouring Hindu homes to pray for their problems and sicknesses. They welcomed it dearly. She was God-guided in all her efforts and remained the Lady with a Lamp of love to the very last.

I am deeply indebted to her for many of her acts of oving kindness. Her company was always a source of great delight to me. I salute her.

— P. R. Ariyapooshanam.

## London Tamil Congregation

For the First time in the history of LTC Palm Sunday Service was held and the Guest speaker was Rev. Dr. Thomas Thangaraj of Thamil Nadu Theologikal College Madhurai. The worship was followed by "*Kathakalakshebam*" by him.

Vice President of the Sri Lanka Methodist Church Mrs. Sathiawathy Anandanayagam preacedhi at the May Service.

The following have been appointed as the Office bearers for 1988/9.

Hon. Secretary: Mr. Stanley Nalliah.

Hon. Asst. Secretary: Mohan Solomons.

Hon. Treasurer: Mr. C. C. Emmanuel.

*Choir Leader*: Mrs. Vathany Thangiah.

*Confederation of Health Service Employees*

## Sri Lanka deaths

The following were killed in October 1987 in the Jaffna District Hospital, which is the largest in the Northern Province: Dr. A. Sivapathasuntharam, consultant paediatrician; doctors Ganesharatnam and Parimelalahan; the matron Mrs. Vadivelu; nurses Mrs Leelawathy, Miss Ramnathan and Miss Sivapalan; ambulance driver Mr. V. Shanmugalingam; telephone operator Mr. Kanagalingam; works supervisors Mr Krishnarajah and Mr. Selvarajah; and hospital employees Mr. Sukumar, Mr. Sivaloganathan, Mr. Marutharajah, John Peter, Mr. Markandu, Mr. Thurairajah, Mr. Sivarajah, Mr. Jeganathan, Mr K. Vetharianyan, Mr. K. Ratnarajah and Mr. Ratnasingam.

These names were sent out by the Co-ordinating Committee of North and East Sri Lanka, where civil war has been going on for the last four years.

Mrs. B. Y. R. Premarajah,
*Wandsworth Health Authotrity,*
and Mr. C. T. Premarajah,
*Bloomsbury Health Authority,*
*(both COHSE members),*

## IN MEMORIAM

CHERISHED MEMORIES
OF
**Rev. K. S. Jeyasingam**
Departed: 6th September 1980
and
**Marjorie Rosemalar Jeyasingam**
Departed: 8th March 1976

*For I know whom I have believed.*
II Tim: 1: 12.

Fondly remembered and deeply missed.
All your loved ones.
25, Canon Somasundram Avenue,
Chundikul.

## THIRD YEAR REMEMBRANCE

IN EVERLOVING MEMORY
OF
**I. P. Thurairatnam**
Called to rest on
27th April 1985.

"*Deep in our hearts you will always stay*
*Loved and remembered every day.*",

Affectionately and lovingly remembered by his wife children and their families.

## Tamil Christians in U. K.

A consultative document is being studied by several Tamil Christians all over U. K. with an idea of forming a co-ordinating fellowship. Tamils in and around London worship at four different places under different leaders and organisations. Some are Croydon Fellowship, Emmanuel Fellowship, Tanil Christian Fellowship, London Tamil Congregation.

At present joint prayer meetings and Bible studies are held once a month at different Churches. It is envisaged the co-ordinated Fellowship to take activ role in the socio, political and economical state of Tamils.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**
Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது
நீதி ஜனத்தை உயர்த்தும்: பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்.

மலர் 148] 22, 29-4-1988 [இதழ் 4, 5


## செய்திகள்

### திருமதி இராசம்மா செல்வத்துரை

கல்லுவம் உடுப்பிட்டியில் வசித்தவரும், உடுப்பிட்டி சபையைச் சேர்ந்தவருமாகிய திருமதி இராசம்மா செல்வத்துரை காலமாகி விட்டார். இவர் இளைப்பாறிய அதிபர் திரு. S. S. செல்வத்துரையின் அருமை மனைவியும், முன்னாள் வைத்திய அதிகாரி (மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை) டாக்டர் P. S. செல்வச்சந்திரன், டாக்டர் B. S செல்வராசா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இம்மாதம் 17ஆம் திகதி காலை 8-00 மணிக்கு சபைப் போதகர் அருள்திரு. V. N. தர்மகுலசிங்கம் அவர்களினால், இல்லத்திலும் கல்லறைத் தோட்டத்திலும் நடத்தப்பட்டது. யாழ். ஆதீன முன்னாள் பேராயர் அருள்மிகு எஸ். குலேந்திரன் அவர்களால் இரங்கலுரை வழங்கப்பட்டது.

இவரது பிரிவால் துயருறும் அன்னாரின் கணவன், பிள்ளைகள் அவர்களது குடும்பத்தினர், இனசுற்றத்தினர் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

### தமிழ் நாட்டிற்கு புதிய ஆளுநர்

தமிழக ஆளுநராக திரு. பி. அலெக்ஸாந்தர் பதவியேற்றார். இவர் நெடுங்காலம் பிரிட்டனுக்கான இந்திய உயர் ஸ்தானிகராகப் பணியாற்றியவர். "தமிழ் நாட்டில் சுதந்திரமான மாநிலத் தேர்தல்களை விரைவாக நடத்துவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படும்" என்றார் ஆளுநர் திரு. அலெக்ஸாந்தர்.

### நிவாரணம் இன்றி 17 ஆயிரம் குடும்பங்கள் தவிப்பு

வலி வடக்கில் இலவச நிவாரணப் பொருள் விநியோகம் இன்னமும் மேற்கொள்ளப்படாமையால், பதினேழாயிரம் குடும்பங்கள் எவ்வித பொருளும் பெறுமையால் தவிப்பதாகப் புகார் கூறப்படுகிறது.

### மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை

அண்மையில் இடம்பெற்ற கலவரங்கள் காரணமாக சேதப்படுத்தப்பட்ட மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை திருத்த வேலைகள் நடைபெற்று முடிந்ததெனத் தெரிகிறது. இவ் வைத்தியசாலை செயல்படத்தொடங்கியுள்ளது இவ்வைத்திய சாலைக்கு வேண்டிய திருத்த வேலைகளை இந்திய அமைதிப் படையினர் முன்னின்று செய்து முடித்தது குறிப்பிடத்தக்கது. யாழ். ஆதீனம் இன்னும் அதிகமான தொகை செலவழிக்க வேண்டியுள்ளதென அறிகிறோம்.

### கிழிந்த ரூபா நோட்டுகளை மாற்றலாம்!

பழைய கிழிந்த ஐந்து ரூபா, இரண்டு ரூபா நோட்டுகளை இலங்கை இராணுவ முகாம்களில் மாற்றிக் கொடுக்கப்படும் இத்தகவலைப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இந்நோட்டுக்களை மாற்ற விரும்புவோர் யாழ். கோட்டை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, பலாலி ஆகிய இராணுவ முகாம்களில் சில்லறைப் பணமாக மாற்றிக் கொள்ள முடியுமென அறிகிறோம்.

### அரசாங்க ஊழியர்களின் லீவு விடயத்தில் அரசின் தீர்மானம்

அரசாங்கப் பணியாட்கள் இனிமேல் தமக்குரிய சொந்த லீவு நாட்களாகிய 21 நாட்கள் சமயாசமய லீவும், 24 நாட்கள் விடுமுறை லீவும் மட்டுமே பயன்படுத்த முடியும். இதைத் தவிர்ந்த வேறு எந்த லீவும் சம்பளமற்ற லீவாகவே கருதப்படும் என அரசு தீர்மானித்துள்ளது.

### விமானப் போக்குவரத்து உடன்பாடு!

கொழும்புக்கும் புதுடெல்லிக்கும் இடையே நேரடி விமானப் போக்குவரத்துக்கு வழி செய்யும் உடன்பாடு ஒன்று, கொழும்பில் சமீபத்தில் கையொப்பம் இடப்பட்டது.

பலாலி விமான நிலையத்தைப் போக்குவரத்துக்கு ஏற்றதாக அபிவிருத்தி செய்யவும் இந்த உடன்படிக்கை வழி செய்கின்றது.

### வாழை இலையில் சாப்பிடுங்கள்!

விரதம் இருக்கும் நாட்களில், திருமணம், மற்றும் விருந்துபசாரங்களில் வாழை இலைகளில் சாப்பாடு பரிமாறப்படுவது வழக்கம். ஏன் வாழை இலையில் சாப்பிடுவது நல்லது தெரியுமா? இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. வாழை இலை சாப்பாடு வெப்பத்தைக் குறைக்கிறது. பித்தம் வாராமல் தடுக்கிறது. [illegible] முக்கியமான காம உணர்வைச் சரியான கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருகின்றது.

## நான் கல்வாரி அன்பை அறிந்திருக்கிறேனா?

— அமிக்காமிக்கேல் —

(முற்றொடர்)

தனது நேசகுமாரனை எனக்காகக் கொடுத்து இவ்வளவாய் என்னை நேசித்தவருக்குக் கொடுக்காதபடி எதையாவது நான் ஒதுக்கி வைப்பேனானால், அல்லது என் அந்தரங்க ஜெபத்தில் "ஆண்டவரே, இது ஒன்றைத் தவிர வேறெதையும் நான் உமக்காகக் கொடுப்பேன்" என்று சொல்லுவேனானால் நான் கல்வாரி அன்பை அறிந்தவனல்ல. பிறரால் ஏற்படும் உபத்திரவம், தனிமை, பொருத்தமற்ற சூழ்நிலை, எதிர்பாராத சோதனைகள் முதலிய பரீட்சைகளைப் பொறுமையாய்ச் சகிக்காமல் அவைகளை ஒழிக்க முயலுவேனானால் நான் கல்வாரி அன்பை அறிந்தவனல்ல. ஒரு தானியமணியைப்போல் தரையில் விழுந்து சாக ஆயத்தமாயிரா விட்டால் நான் கல்வாரி அன்பை அறிந்தவனல்ல.

கல்வாரிப் பாதை பூஞ்சோலைக்கல்ல சிலுவைக்கே நடத்துகிறது என்பதை மறந்து தேவனுடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக எனக்குவரும் துன்பங்களில் விடுதலை பெறவேண்டுமென்று ஜெபிப்பதற்குப் பதிலாக எனக்குத் துன்பமே வரக்கூடாது என்று ஜெபிப்பேனானால்; அல்லது, துன்பங்களை சந்தோஷத்தோடு சகிப்பதற்குப் பதிலாக பாதையோடு முரடாயிருக்கிறதே என்றெண்ணிக் கவலைப்படுவேனானால் நான் கல்வாரி அன்பை அறிந்தவனல்ல. என் ஆண்டவரின் ஊழியம் முன்னேறுவதைவிட என் சொந்த சந்தோஷத்தை அதிகமாய்த் தேடுவேனானாலும், இந்தவேலையின் மூலமாய் நான் மிகுதியான கிருபையைப் பெற்றிருந்தபோதிலும் சோர்படைவேனானாலும் நான் கல்வாரி அன்பை அறிந்தவனல்ல. நான் ஒரு நிமிடமும் விடுதலையில்லாமல் எப்பொழுதும் என்னைக்குறித்தே சிந்தித்துக் கொண்டிருக்கிறேனானால் நான் கல்வாரி அன்பை அறிந்தவனல்ல.

நான் "அளவுமீறிய அன்பு" எதிலும் சிக்குண்டிருக்கிறேனானால் அல்லது, நான் என் ஆண்டவருக்குக் கீழ்ப்படியக்கூடாதபடி ஒரு ஆளோ ஒரு இடமோ, ஏதேனும் ஒரு காரியமோ தடையாயிருக்குமானால் நான் கல்வாரி அன்பை அறிந்தவனல்ல. சிலுவையினடியிலுள்ள புழுதியைத்தவிர வேறு ஏதேனும் இடத்தை என் மனம் ஆசிக்கிறதானால் நான் கல்வாரி அன்பை அறிந்தவனல்ல.

---

சொல்லும் பொருளும்

## திருப்பணிவிடை

திருப்பணிவிடை என்பது ஊழியம். சபையில் திருப்பணிவிடைக்கென அழைக்கப்படுதல் என்பது, இறைமக்களின் வாழ்க்கை தொழுகை என்பனவற்றில் பணிவிடையாற்றும்படி அழைக்கப்படுதலாகும்.

பழைய ஏற்பாட்டில் மூன்று வகைப் பிரிவினர்க்குத் திருப்பணிவிடை ஒப்புவிக்கப்பட்டுள்ளது. இவர்கள், இறைவனால் குறிப்பிட்ட பணிவிடைக்குச் சிறப்பாக அழைக்கப்பட்டவர்கள். இம் முப்பிரிவினர் ஆசாரியர், தீர்க்கதரிசிகள், அரசர்கள் என்பவர்களே.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசாரியரின் பணிவிடை எருசலேம் தேவாலயத்தில் பலிசம்பந்தமான தொழுகைக்கு உட்பட்டிருந்தது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மிகவும் பரவலாயிருந்த தீர்க்கதரிசனம் ஓய்ந்து போயிற்று. நியாயப்பிரமாணத்தை வியாக்கியானத்தை தம் தொழிலாகக் கொண்ட வேதபாரகர் தோன்றலாயினர். இவர்களுக்கு யூதசெபாலயத் தொழுகையில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

திருப்பணிவிடைக்குத் திருச்சபை தந்த பொருள் என்ன? கிறிஸ்துவின் ஆளுமை, பணிவிடை என்பவற்றிலிருந்தே நேரடியாக இதன் நோக்கம் தோன்றுகிறது. யூதமதத்திலிருந்தும் சில கருத்துக்களைப் பெறுகிறது. யூதமத ஆசாரிய அமைப்புகள், பலி முறைகள் யாவும், கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் பலி ஆகியவற்றில் நிறைவேறிற்று. சடங்காசார நியதி சார்ந்த நிலையில் மோசேயின் சட்டங்கள் கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்தும் நிலையை இழந்தது. இதனால், இச்சட்டங்களை விளக்கி வியாக்கியானஞ் செய்து வந்த வேதபாரகரின் தேவை இல்லாமற் போயிற்று. மாறாக நற்கருணை விருந்து கிறிஸ்துவின் பலியை நினைவுகூருவதாயிற்று. இது யூதசமய பலிகளுடன் ஒப்பிடப்படுகிறது (I கொ. 10:18 காண்க).

இதனால், கிறிஸ்தவ திருப்பணிவிடை படிப்படியாகக் கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்துடன் தொடர்பு படுத்தப்பட்டது. வேதபாரகரால் செய்யப்பட்ட திருச்சட்ட விளக்கத்தின் இடத்தை நற்செய்திப் பிரசங்கமும், கிறிஸ்தவ வாழ்க்கைப் போதனையும் பிடித்தன. பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் ஊற்றப்பட்டதோடு தீர்க்க தரிசனமானது ஒரு புதிய பாணியில் புதுப்பிக்கப்பட்டது.

ஆகவே, கிறிஸ்தவ திருப்பணிவிடைக்கும் யூதசமயத் திருப்பணிவிடைக்குமிடையே ஒரு தொடர்ச்சி இருக்கிறது. ஆனால், கிறிஸ்துவின் வெளிப்பாடும் பணிவிடையும் சபையின் திருப்பணிவிடையின் தன்மையை மாற்றியமைத்தது போலவே பழைய ஏற்பாட்டுத் திருப்பணியும் மாற்றியமைந்தது.

கிறிஸ்தவ திருப்பணி விடையைப் பற்றிய அடிப்படை எண்ணங்கள் சில சொற்களில் வெளிப்படுத்தப் படுகின்றன "அப்போஸ்தலர்கள்" என்பவர்கள் (Apostellein – "அனுப்புதல்" என்ற கிரேக்க பதத்திலிருந்து தோன்றுகிறது) தமது தூதுப்பணியைத் (Mission) தொடர்ச்சியாயச்

(3-ம் பக்கம்பார்க்க)

### தாரகை ஒளி

"கட்டளை என்பது ஒரு விளக்கு; அறவுரை என்பது ஒளி;
கண்டித்தலும் தண்டித்தலும் நல்வாழ்வுக்கு வழி"

— நீதிமொழிகள். 6 : 23

# எங்கள் கருத்து

## துன்புறும் வேந்தன்

'இயேசுவை நம்பு, அவரை உனது ஆண்டவராக ஏற்றுக்கொள். உனக்குத் துன்பமே இருக்காது எப்போதும் மகிழ்வுடன் வாழலாம்' என்று பல பிரசங்கிமார் கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். குறிப்பாகத் துன்பம் நிறைந்த இந்நாட்களில் அடிக்கடி குருமார் மேற்கூறிய போக்கைக் கடைப்பிடிக்கின்றனர் என்பதை நாம் அறிவோம். இத்தகைய கூற்றுக்களில் ஓரளவு உண்மை அடங்கியிருக்கிறது என்பதை நாம் மறுக்கவில்லை, ஆனால் இது நற்செய்தியின் முழுமையல்ல.

கிறிஸ்தவ வாழ்வு துன்பம் நிறைந்த வாழ்வு வேந்தன் இயேசு துன்பத்தின் வழியாகச் சென்றவர் அவரைப் பிலாத்து வாரினால் அடிப்பித்தான். போர்ச் சேவகர் அவரைக் கேலி செய்தனர். முள் முடியை அவரது தலையில் சூடி அவரை அடித்தனர் துன்பத்தைப் பொறுமையோடே ஏற்றார். தமது பணியை மறக்கவில்லை

ஜனாதிபதி அல்லது தலைமை அமைச்சர் என்ற ஒரே காரணத்தால் வசதியையும், வாய்ப்பையும், பற்பல சௌகரியங்களை அனுபவித்த நாட்டின் தலைவர்கள் பலர் ஆனால் அரசற்கரசனும், எந்த ஜனாதிபதி, தலைமை அமைச்சர்களிலும் மேம்பட்டவருமாகிய இயேசு பெருமான், வேந்தர்க்கு வேந்தனாகிய அண்ணல் கிறிஸ்து தலைசாய்க்க இடமின்றி, தனக்கெனப் போராட படைவீரரின்றி, எவ்வித பட்டாடையோ பணியாட்களோ இன்றி துன்பத்தையும் துயரத்தையும் அணிந்து நின்றார். அவர் நமக்களிக்கவேண்டிய மீட்புக்கு துன்பம் தேவை என்பதை உணர்ந்தார்.

'தனக்குரிய சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீடனாயிருக்க முடியாது' (லூ. 14 : 27) என்றார் இயேசுபிரான். அவர் சென்ற வழியே, அவர் அடியார் பின்பற்ற வேண்டிய வழி. இன்று கிறிஸ்தவர்களாகிய நம்மை சுகபோக வாழ்க்கைக்கல்ல, சிலுவையைச் சுமக்கும் வாழ்வுக்கே எம்பெருமான் அழைக்கிறார். இதற்காகவே, நாம் கடந்த காலப் பயங்கரச் சம்பவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டோம்.

நமது முள்முடி, சிவப்பங்கி, சிலுவை எவை என இந்நாட்களில் நாம் அறிவது அவசியம் தொழிலில் உண்மையாய் இருப்பதினால் வருகின்ற நட்டம், குறைவு. இவையே நமது முள்முடி. பள்ளியில், கல்லூரியில், தொழிற்சாலையில், நாட்டில், திருச்சபைகளில் நீதிக்குப் புறம்பான போராட்டத்தில் ஈடுபட மறுப்பதால் வரும் துன்பங்கள், அயல் வீட்டு ஏழைக்கு உதவிபுரிய விரும்புவதால் மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாடுகள் சமுதாயத்தால் ஒதுக்கப்படும் மக்களோடு அன்புடன் பழகுவதால் இழக்கவேண்டிய சில பெரியாரின் நட்புறவுகள் இராணுவம் செய்யும் அக்கிரமங்களை அநீதியென அறிவிப்பதால் வரும் துன்பங்கள் – இவை அனைத்தும் நமது சிலுவையாய் அமையலாம் அல்லவா?

இறைவன் நம்மைத் துன்பங்களிலிருந்து அற்புதமாய் மீட்டார் நாம் நல்லவர்கள் என்பதனால் அல்ல. பாதுகாப்பைப் பெற்ற நாம், துயரத்தில் ஆழ்ந்திருப்போர்க்கு ஆதரவை அளிக்கவும் அவர்களின் நல்வாழ்வுக்காக உழைக்கவுமே நாம் அழைக்கப்படுகிறோம் இதுவரை தன் நலத்தோடு வாழ்ந்தோம். பொருட்களைச் சேர்த்தோம். பெரும் வீடுகளைக் கட்டி உல்லாசமாகச் சுகபோகத்துடன் வாழ்ந்தோம். ஆனால், இன்று நாம் கண்ட மிச்சமென்ன? வீடுகள் இடிந்தன, பொருட்கள் போயின, தேடிய பணம் சென்றுவிட்டது நாம் இன்னும் அழியாமல் இருப்பது ஆச்சரியமே!

ஆகவே, நம்மை விட்டு விலகாமலும், கைவிடாமலும், எம்மோடு இருக்கும் எங்கள் நாதரைப் போல, துன்பத்தினூடே இறையன்பை, சுயநலமின்றி பிறர் நலங்கருதும் பெருமனப் பான்மையுடன் செயற்படுவோமாக

## வேதாகமச் சங்கீதங்கள்

-: கவிதை வடிவம் :-

நவாலியூர் சி. என். செல்லத்துரை

1 விண்ணவன் இறைவன் அந்த
மன்னவன் என்னை நல்ல
முறையினில் பூமியிலே
குறையின்றி வழிநடத்திக்
காக்கின்றார் மந்தைகளைக்
காக்கின்ற மேய்ப்பனைப்போல்
ஆதலால் எனக்குஎல்லாம்
பூதலந் தனிலேயுண்டு
தாழ்ச்சியும் எனக்கு இல்லை
வீழ்ச்சியும் இல்லை இல்லை

2. பசும்புல்லுத் தரையினிலே
சுகங்கண்டு நான் அமர்ந்தே
ஓய்வுகள் எடுப்பதற்கு
வாய்ப்புகள் தருவதோடு
பாலாறு போலஓடும்
தேனாறு நீர்நிலைகள்
என்றுள்ள இடங்களிலும்
நன்றென்னை நடத்திச்செல்வார்

உடற்சுகம் குறைந்துநானும்
மனப்பயம் கொள்ளும்போது
பொற்பரன் எந்தனுக்கு
அற்புதச் சுகம்தருவார்

3 தனக்கிங்கு அதிகமேன்மைக்
கனம்பொங்கு பணிகளெல்லாம்
நிதமும்நான் செய்வதற்கு
கனமும்தான் உதவிசெய்வார்

4 இறப்பென்னும் மரணஇருள்
இருக்கின்ற பள்ளத்தாக்கில்
நான்நடந் தாலும்அங்கு
ஏன்பயம் எனக்குஎன்பேன்
ஏன்பய மெனக்குஎன்பேன்
வான்பர னேஇறைவா
நீதான்என் னோடுவந்து
சீராய்ப்பின் னாலேநின்று
என்வழி காட்டியாகி
என்உயிர் காத்திடுவாய்
உன்செங்கோல் ஆட்சியோடு
உன்கையால் நீயேந்தும்
அதிகாரக் கோலும்என்னை
வலுவாகத் தேற்றிநிற்கும்

5. என்பகை ஆட்களது
முன்னிலை யில்எனக்கு
அறுசுவை அதிசுவையாம்
புதுச்சுவை விருந்தளித்தாய்
உன்னுடை நல்விருந்தாய்
எந்தனை ஏற்றுவிட்டாய்
சொல்லொணு முறையினிலே
எண்ணிலா ஆசிகளும்
கணக்கற்று இருப்பதற்காய்
எனக்கென்று தந்துவிட்டாய்
எனவேஎன் பாத்திரமும்
பரனேநல் உணவினாலே
நிரம்பியே வழிந்துநிற்கும்
அளவிலே குறைந்திடாது

6 அத்துடன் நின்றிடாது
என்றும்என் நலனுக்காக
பொய்க்காத நன்மையோடு
மெய்யான ஆதரவும்
அன்பாகத் தந்தவன்நீ
நன்குக அவைஇணைந்து
என்கால நேரமெல்லாம்
என்கூட ஒட்டிநிற்கும்
அதன்பின்பு உனதுவீட்டில்
நிதம்அங்கு வாழ்ந்திருப்பேன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து வரும்படி கிறிஸ்துவால் நியமிக்கப்பட்டு அதிகாரத்தோடு அனுப்பப்பட்டவர்கள். யோ. 20 : 21 — "பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார் இயேசுபிரான். நற்செய்தியின் உண்மைகளுக்கு அப்போஸ்தலர் சாட்சி பகர்ந்தனர். அவர்கள் போதித்தனர். ஒழுங்கு விதிகளைப்பற்றித் தீர்மானிக்கின்றனர். இதர திருப்பணி விடையாளரை "அனுப்புவதால்" சபை பரம்பும்படி செய்கின்றனர்.

"தூது" என்ற எண்ணம் கிறிஸ்தவத் திருப்பணிவிடைக்கு அடிப்படையானது என்பதை அப்போஸ்தலர் பணியில் காண்கிறோம். அதாவது, கடவுள் மனிதரை அனுப்புவதற்காகக் கிறிஸ்துவையும் தமது பரிசுத்த ஆவியையும் அனுப்புவதுடன் தொடங்கின. பணியைத் தொடர்ந்து செய்யவும் அதில் பங்கு வகிக்கவும் அனுப்பப்படுதல் என்ற எண்ணம் அப். நட. 13: 4: I பேது 1 : 12 ஆகிய வசனங்களில் காண்க.

(வளரும்)

### காணமற் போனவர்கள் பற்றிய புதிய சட்ட மூலம்!

ஒருவர் காணமற்போன ஒரு ஆண்டின் பின், அவரை இறந்துவிட்டார் என்றே கருதவேண்டும் என்று கூறும் சட்டமூலம் இலங்கை நாடாளுமன்றத்தில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டது.

முன்னர் இருந்த சட்டத்தின்படி, ஒருவர் காணமற்போன ஏழு ஆண்டுகளின் பின்னரே இறந்தவராகக் கருதமுடியும்.

இன்றைய சூழ்நிலையில் பலரின் மறைவுக்குக் காரணம் கூறமுடியாதிருக்கின்றது என்று மத்துகம எம். பி. அனில் முனசிங்க நடாளுமன்றத்தில் சொன்னதாக அறிகிறோம்.

### நன்றி செலுத்தும் ஆராதனை:

யாழ். ஆதீனத்தின் முன்னாள் பொருளாளர் திரு. S. S. செல்வத்துரை அவர்களின் துணைவியார், காலஞ்சென்ற திருமதி கிறெசில்டர் இராசம்மா செல்வத்துரை அவர்களின் வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை அன்னாரின் இல்லத்தில், (இராஜஸ்தான்" – கல்லுவம், கரவெட்டி) இம்மாதம் 9ம திகதி, சனிக்கிழமை காலை 10.30 மணியளவில், யாழ். ஆதீனப் பேராயர் அருள்மிகு டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது இவ்வாராதனையில் திருமதி F. G. தம்பிஐயா, திரு. S சொலமன் ஆகியோர் திருமறைப் பகுதிகளை வாசித்தனர். இரங்கலுரை திருமதி டாக்டர் சந்திரா அம்பலவாணர், திருமதி J. A. தவராசா ஆகியோரால் வழங்கப்பட்டன. பேராசிரியர் அருள்திரு. டி. ஆர். அம்பலவாணர் அவர்கள் அருளுரை வழங்கினார். இவ்வாராதனைக்கென சிறப்பாக ஆராதனை ஒழுங்கு அச்சடிக்கப்பட்டது. தூய தமிழில் பெயர்க்கப்பட்ட பற்றுறுதி (விசுவாசப் பிரமாணம்) பயன்படுத்தப்பட்டது. ஆராதனையின் பின் அனைவர்க்கும் விருந்துபசாரணை திரு. S.S செல்வத்துரை அவர்களால் நடத்தப்பட்டது.

### சமூக சேவை

ஒளியிழந்த கண்கள்
இருளடைந்த இல்லங்கள்
மங்கிப்போன வாழ்வுகள்
அருகில்
கிராமங்களில்
...............................
ஒளியேற்ற விரும்பினேன்
ஓடிப்போய் ஒரு பெட்ரோமாக்ஸ்
வாங்கி
வந்து
...............................
எங்கள் வீட்டு ஹாலில்
மாட்டி மகிழ்ந்தேன்

— (போதகர் மாமா)

*EDITORIAL COMMENTS*

## We Look Forward

**Ourselves**

After a six-month long quiescence, we are happy to be back on course from 1-4-88 taking to heart the advice of Samuel Butler, the British satirical novelist (1835 – 1902) that silence is not always 'golden'. It is tact that is golden and not silence.

There is another compelling reason for our desire to pursue our work as a christian journal with unrelenting zeal. By one of those coincidences which shape history, two of our starry moments loom large on the diocesan horizon as we approach the doorstep of the next century. We refer to the 175th Anniversary of the landing of the first band of American Missionaries at *Tellippalai* (in the Jaffna District) in 1816 and the 150th Anniversary of *The Morning Star* the second oldest newspaper established in 1841. Both these events fall in *1991* – an year which the diocesan community is looking forward to, in a splendid concentrate of expectancy.

**The Council Meets**

The 41st Annual Meeting of the Council of the Jaffna Diocese of the CSJ was held at Vaddukoddai on the 12th and 13th of April, two auspicious dates which marked in Sri Lanka the Sinhalese and Tamil New Year Vaddukoddai and its suburbs were quiet ostensibly in tune with the mood of moderation in people's way of life now evidence everywhere.

The Bishop's *Charge* to the Diocese appears elsewhere in this issue. The Bishop pointed out that the trend of people to flee from the country does not square with their commitment "to suffer under Pontius Pilate" – an affirmation they make every Sunday. Of topical significance and importance was the resolution passed unanimously at the meeting that the Council calls upon the Government of India and Sri Lanka to wind down the state of belligerency and lay down the arms and set about immediately to prepare the groundwork for a lasting PEACE in the land. The Council also in this context acknowledged its indebtedness to foreign organisations and local bodies for their timely assistance rendered so thoughtfully to those caught unexpectedly in tragic situations.

**Refugee Relief and Rehabilitation**

High among the priorities of the Council's activities during the years 1986 and 1987 were according to Reports made available at the Council, work among those afflicted and displaced by the political offensives. In 1986, one million and twenty thousand rupees were spent on emergency relief. These included medical facilities free of charge at the diocesan medical clinics and accommodation for children at the Day Care Centres, run by the Diocese

At the request of the Government Agent of Jaffna, *1650* families have been given relief in the Jaffna Peninsula. A sum of five lakhs from grants obtained from the World Council of Churches was made available in 1987 to give relief particularly to those who had lost the bread-winners in a family.

The aid given by the Christian Union and the Methodist Church was uesd largely to relieve the sufferings of the people at *Varany.*

**Childrens' Homes: Day Care Centres: Vocational Centres**

"*The frontiers of the possible*" said a modern writer "*are not determined by the limits of the actual,* Despite the damages caused to buildings and losses caused to Day Care Centres the total number of children in our "*homes*" of the Diocese is *310* and the number in the 16 *Day Care Centres* is *950* More than 95 per cent of the children in the Centres are non-Christians. Rajendrakulam in the Vavuniya District and Konavil and Bharathipuram in the Kilinochchi District are new Centres which have been opened

For the millions of people (the current population of Sri Lanka is 16.4 By the year 2001 AD this figure is expected to rise to 20 million) to whom life is a hard and marginal struggle the '*Homes*' and *Day Care Centres* have been a great boon. But liberating the poor should not mean only providing welfare assistance It also means reconstructing the total society with a more participatory slant The *Mankulam* Vocational Centre and in a smaller scale the *Delft* Vocational Centre are attempts to serve this need:—

Many years ago, we remember at an ACUT Conference in Colombo, Mr J. C. A Corea, then Principal of Royal College, made this comment He said "students spent their time indulging in *politics* and complaining about *food*. They have no other interests".

Are "politics and food" dispensable interests? As a former Secretary of the NCCI put it "A Church *for* the poor is not sufficient: A Church *with* the poor is not enough: A Church *of* the poor is the thing" Unless the Church makes an attempt to clear the ambiguity that clouds our minds about the *POOR*, PEACE in the land would not be an immediate prospect. For, as the World Council of Churches has affirmed at Vancouver:

"PEACE is a tree with justice at the root"

## Bishop's Charge at the Diocesan Council

We have assembled here by the Grace of God and we remember His mercies with thankful hearts. We read in I Kings Ch: 19 how he guided the O T Prophet Elijah and a similar experience has been given to us in this land Elijah is the earliest prophet we find in the O T The first thing that came to him was the word of God and he gave the message according to the world of God he had received If we reflect on the experience of Elijah we will receive the message for our time. At first Elijah spoke about the drought. When the drought came in Israel he went to Zarephath and met the widow who lived there but even in drought in the house of the widow there was flour and oil Then the great prophet was wonderfully fed by the raven by brook Cherith. These experiences showed that the lord was mighty and strong This is an ordinary faith in the greatness of God. In our childhood we used to repeat the lines "Our God is God of Day and Night. In his hands are power and might". However, Elijah who saw the might of God had to undergo tribulations as well In the time of King Ahab there was a great controversy in the land of Israel The issue was whether Baal or Lord of Israel was the True God. At Mount Carmel Lord God accepted the sacrifice of Prophet Elijah. This was a clear sign that Lord was mighty and the Lord of history. The prophets of Baal were defeated and humiliated and Prophet Elijah exterminated them.

Jezebel the wife of King Ahab was infuriated by the action of Elijah and conspired to kill him The prophet had to flee from the country. When the Prophet Elijah went into hiding the Lord asked him "What does thou here Elijah? (I Kings 19:9.) He told the Prophet "Go forth and stand upon the mount before the Lord "When the Lord said this Elijah replied "I had been very jealous for the Lord of God of hosts; for the children of Israel have forsaken thy convenant, thrown down thine alters and slain thy prophets with the sword; and I, even I am left; and they seek my life, to take it away", (I Kings 19:10.)

Because of this reply God gave him a vision At first there was a great strong wind which was followed by an earthquake and a great fire, but God was not there Even though these things were great upheavals in the history of man, Elijah could not see the presence of God in them Finally there was a great silence and Elijah heard the soft voice of God. In these days our faith is also undergoing a similar experience. We repeat the line "Our God is God of Day and Night, In his hands are power and might" When we are in that stage we also become frustrated and disillusioned at times Elijah told the Lord the reason for the hiding. The prophet was asked to go and wait on top of the mountain. The prophet who underwent the mountain-top experience had to go back to the mountain top to hear the word of God.

In the transfiguration of Jesus Christ prophet Elijah also appeared. At that time a voice came from heaven "This is my beloved son, listen to him". When the prophet stood alone trusting in the might of God a vision was given to him The hands of God no doubt are powerful, but they are the hands stretched out from the cross Jesus gave himself to the world by carrying away the sins of the world. He showed his might not by killing people but by giving himself to be killed by the people. His might and strength was seen in his suffering, for the sake of others The big temptation for the Tamil people today is to flee from the country. When we make preparations to go out of this land the Lord asks what are you doing here? He says, do you not know the responsibilities I have given you. In the present situation as we live in a troubled country we need to experience the might of God in his suffering The church is called upon to fulfill the Master's task of suffering under Pontius Pilate.

*Obituary*

**Mrs. Sarojini Amarasinghm**

"The death occurred in Colombo after a short illness of Mrs. Sarojini Amarasingham beloved wife of C. Amarasingham, (Retired Manager, Lever Bros.), Loving mother of Selvaranee (Nigeria), Anton, Mano (U. K), GnanaKumar, Evilyn (Dubai), Vasantha (Dubai). Loving grand mother of Jeyakumar, Mohan, Karunan, Chandrakumar, Anoja, Niranjala, Mala, Ashley & Neroji. Mother in-law of T. Selvarajah (Nigeria), Janaky, Mohini (U K), Mathanarajah (Dubai), Trevor (Dubai) and Priya.

Cortage taken from 73/34, Sri Saranankara Place, Dehiwala for burial at General Cemetery, Kanatha on 8th November 1987.

### Correction

We are sorry that in the news report "Installation of New Principal" which we published in our last issue the name of the reporter Mr Vitor Kirupairaj had been inadvertently omitted.

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QJ/64/News/87*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 29th April 1988 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna